

மதுராந்தகம் தொகுதி இடைத்தேர்தல் பணிகள் குறித்து கழக தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகளுடன் மதுராந்தகம் நகர கழக அலுவலகத்தில் அணிச் செயலாளர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா தலைமையில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. மாவட்ட கழகச் செயலாளர் க.சுந்தர், நகரச் செயலாளர் கு.குமார், அணியின் ஆலோசகர் கோவி.லெனின், துணைச்செயலாளர் அ.தமிழ்மாறன், மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஜியாவுதீன் மற்றும் நிர்வாகிகள் பங்கேற்றனர்.



மதுராந்தகம் சட்டமன்ற தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வெற்றி வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து அருங்குணம் ஊராட்சியில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் –முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன், வீடுவீடாக சென்று பொதுமக்களை நேரில் சந்தித்து உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகளை சேகரித்தார். அருகில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, என்.சந்திரன், ப.குணாளன், டி.பாபு, ஜி.கே.ரவி, கோல்டு டி.பிரகாஷ், எல்.பிரபு, கே.பி.முரளிகிருஷ்ணன், செல்வேந்திரன், நடராஜன், சாலமன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

தமிழ்நாட்டின் முக்கிய வழித்தடங்களில்

கூடுதல் ரயில் சேவைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்!

தயாநிதி மாறன் எம்.பி. கோரிக்கையை ஏற்று ஒன்றிய அரசு உறுதி!

புதுடெல்லி, செப்.29-

தமிழ்நாட்டில் திருச்சி, மதுரை, கோவை, நெல்லை உள்ளிட்ட முக்கிய வழித்தடங்களில் கூடுதல் ரயில் சேவைகள் மேற்கொள்வது தொடர்பாக, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, கழக நாடாளுமன்றக் குழுத் துணைத்தலைவரும் கழக விளையாட்டு மேம்பாட்டு அணியின் செயலாளருமான தயாநிதி மாறன் எம்.பி. வைத்திருந்த கோரிக்கை மீது மேல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று ஒன்றிய அரசு உறுதியளித்துள்ளது.

விடுமுறை மற்றும் பண்டிகை காலங்களில், பயணிகளின் இன்னல்களை போக்கும் வகையில் ரயில் சேவைகளை மேம்படுத்த வலியுறுத்தி, கடந்த 17.09.2026 அன்று ஒன்றிய ரயில்வே துறை அமைச்சர் திரு.அஸ்வினி வைஷ்ணவ் அவர்களுக்கு தயாநிதி மாறன் எம்.பி. கடிதம் எழுதியிருந்தார்.

அக்கடிதத்தில், வார இறுதி நாட்கள் மற்றும் பண்டிகை விடுமுறை நாட்களில், சென்னையில் இருந்து தங்கள் சொந்த ஊர்களுக்கு ஏராளமான பயணிகள் பயணிக்கும்போது மிகவும் சிரமமான சூழலை சந்திக்க நேரிடுகிறது என்று தயாநிதி மாறன் எம்.பி குறிப்பிட்டிருந்தார்.



மேலும், ஆயிரக்கணக்கான பயணிகள் தங்கள் கடைசி நேர மற்றும் குறைந்த பயண கட்டண தேர்வாக ரயில் சேவையை நாடுகின்றனர் என்றும், எனினும், குறைவான சேவைகளாலும் போதுமான ரயில் பெட்டி வசதிகள் இல்லாததாலும் கடும் சிரமங்கள் ஏற்படுகிறது என்றும் குறிப்பிட்டிருந்தார்.

இதன் அடிப்படைப் பிரச்சனை, பயணிகள் எண்ணிக்கைக்கு ஏற்ப போதுமான வசதிகள் அல்லது அதிக எண்ணிக்கையிலான ரயில் பெட்டிகள் இல்லாததே ஆகும். எனவே தொடர் விடுமுறை கள், பண்டிகை காலங்கள் மற்றும் பயணிகள் வருகை வழக்கத்தை விட அதிகமாக இருக்கும் என்று கணிக்கக்கூடிய மற்ற நாட்களிலும் தமிழ்நாட்டில் திருச்சி, கோவை, மதுரை, நெல்லை ஆகிய முக்கிய வழித்தடங்கள் மற்றும் அதிக தேவை உள்ள வழித்தடங்களில் கூடுதல் ரயில்களை இயக்க வேண்டும் என்று ஒன்றிய ரயில்வே துறை அமைச்சர் திரு.அஸ்வினி வைஷ்ணவ் அவர்களுக்கு எழுதியிருந்த கடிதத்தில் தயாநிதி மாறன் எம்.பி. தெரிவித்திருந்தார்.

பயணிகளின் எண்ணிக்கை மற்றும் கடந்தகாலத் தேவையின் அடிப்படையில், அதிக தேவை உள்ள வழித்தடங்களில் இயங்கும் ரயில்களில் முன்பதிவில்லாத பொதுப்பெட்டிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும். செயல்பாட்டு ரீதியாகச் சாத்தியமான இடங்களில், அதிக பயன்பாட்டில் உள்ள வழித்தடங்களில் இயங்கும் பொருத்தமான ரயில்களில் குறைந்தது 10 முன்பதிவு செய்யப்படாத பெட்டிகளை இணைக்க வேண்டும். பயணிகளின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு, அனைத்து ரயில் பெட்டிகளிலும் மூடியகதவு அமைப்பை செயல்படுத்த வேண்டும் என்றும் தயாநிதி மாறன் எம்.பி. கடிதத்தில் வலியுறுத்தியிருந்தார்.

இக்கடிதத்திற்கு பதிலளித்துள்ள ஒன்றிய ரயில்வே துறை அமைச்சர் திரு.அஸ்வினி வைஷ்ணவ், "தமிழ்நாட்டில் முக்கிய வழித்தடங்களில் கூடுதல் ரயில் சேவைகள் தொடர்பான, 17.09.2026 தேதியிட்ட உங்கள் கடிதம் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது. நீங்கள் எழுப்பிய விவகாரம் பரிசீலனைக்காக அனுப்பப்பட்டுள்ளது. பரிசீலனைக்குப் பிறகு, இதுதொடர்பாகத் தேவையான மேல்நடவடிக்கை எடுக்கப்படும்" என்று உறுதியளித்துள்ளார்.

தாராபுரத்தில் த.வெ.க. வேட்பாளரை எதிர்த்து கேள்வி எழுப்பிய

கல்லூரி மாணவர்களை கைது செய்வதா?

திராவிட வெற்றிக் கழகத் தலைவர் மல்லை சி.ஏ.சத்யா கண்டனம்!

தாராபுரம், செப். 29-

தாராபுரத்தில் வாக்குச் சேகரித்த த.வெ.க. வேட்பாளரை எதிர்த்து கேள்வி எழுப்பியவர்களை படம் பிடித்த மாணவர்களை விஜய் அரசு கைது செய்ததற்கு திராவிட வெற்றிக் கழகத் தலைவர் மல்லை சி.ஏ. சத்யா கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழ்நாட்டில் அக்டோபர் 06 செவ்வாய்க்கிழமை அன்று நடைபெறவுள்ள மதுராந்தகம் மற்றும் தாராபுரம் சட்டமன்ற இடைத்தேர்தல் சுயநல அரசியலால் மக்கள் மீது திணிக்கப்பட்டு மக்களின் வரிப்பணம் நேரம், காலம் வீணாகிறது இதனால்



வாக்காளர்கள் கோபத்தின் உச்சத்திற்கே சென்று

இதற்கு காரணமாக இருந்தவர்கள் வேட்பாளராகி மீண்டும் வாக்கு கேட்டு வரும் போது தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்து வருகின்றனர்.

அந்த வகையில் தாராபுரம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடும் ஆளும் கட்சி வேட்பாளர் திருமதி சத்தியபாமா மதுராந்தகம் சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் ஆளும் கட்சி வேட்பாளர் திருமதி மரகதம் குமரவேல் ஆகியோர் வாக்கு சேகரிக்க செல்லும் இடத்தில் எல்லாம் ஜனநாயகத்தின் இறுதி எஜமானர்களான வாக்காளர்கள் தாங்கள் வாக்களித்து வெற்றிப்பெற செய்தவர்கள் தங்கள் சுயநலத்திற்காக சட்டமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்ததை ஏன் எதற்கு எதனால் பதவியை ராஜினாமா செய்தீர்கள் என்று கேள்வி எழுப்பி வருகின்றனர். இதை சம்பந்தப்பட்ட வேட்பாளர்கள் பிரச்சாரத்தில் ஒப்புதல் வாக்கு மூலம் அளித்து வருகின்றனர் இதை திராவிட வெற்றிக் கழகம் ஜனநாயகத்தின் வெற்றியாக பார்க்கிறது.

இந்நிலையில் நேற்று முன் தினம் தாராபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பொட்டிக்காம் பாளையம் ஊராட்சியில் வாக்கு சேகரிக்க தங்கள் கிராமத்திற்கு வந்த த.வெ.க. வேட்பாளர் திருமதி சத்தியபாமா அவர்களை ஜனநாயகத்தின் இறுதி எஜமானர்களான வாக்காளர்கள் கேள்வி எழுப்பி வாக்குவாதம் செய்து உள்ளனர் இதை அந்த கிராமத்தைச் சேர்ந்த கல்லூரி மாணவர்கள் கைபேசியில் பதிவு செய்து கொண்டு இருக்கும் போது ஆளும் கட்சி தரப்பினர் காவல்துறையை ஏவி கைபேசியில் பதிவு செய்யக் கூடாது பதிவை எடுக்கச் சொல்லி மிரட்டி உள்ளனர்.

இது ஒன்றும் தனிப்பட்ட ஒருவரின் அந்தரங்க விஷயங்களை பதிவு செய்ய வில்லை பொது வெளியில் நடப்பதை பொதுச் சமூகம் பதிவு செய்வது தார்மீக உரிமை உண்டு என்று மாணவனுக்கு ஆதரவாக கிராமத்தினர் குரல் கொடுத்த போது அவர்களை காவல்துறை சுற்றி வளைத்து வாகனத்தில் ஏற்றி சென்று குண்டடம் காவல்நிலையத்திற்கு கொண்டு சென்று பல்வேறு பிரிவுகளின் கீழ்க்கண்ட நபர்கள் நாச்சிமுத்து. பக்தவச்சலம். ராசு குழந்தைவேல். சிறிதர். குணசேகரன். கோவிந்தராசு ஆகியோர் மீது இந்திய தண்டனைச் சட்டம் குற்ற எண் 321/26. U/S 189(2). 126(2).296(B). 115(2).351(3) BNS R/W 4 OF TNPHW ACT & 3(1) OF TNPPDL ACT ஆகிய பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்து வாக்களிக்கும் ஜனநாயக கடமையாற்ற முடியாமல் சிறையில் அடைத்து உள்ளது பாசிச த.வெ.க. அரசு.

செத்தே பிறக்கும் குழந்தையைப் போன்று தேர்தலுக்கு முன்பே முடிவு தெரிந்து விட்டதால் தங்களுக்கு எதிரானவர்களை காவல்துறை மூலமாக அச்சுறுத்தும் ஜனநாயக விரோத நடவடிக்கையை திராவிட வெற்றிக் கழகம் கண்டனம் தெரிவித்து கொள்வதோடு கைது செய்யப்பட்ட அனைவர் மீதும் போடப்பட்ட வழக்குகளை திரும்பப் பெற்று நிபந்தனை இல்லாமல் உடனடியாக விடுதலை செய்ய தமிழ்நாடு அரசை திராவிட வெற்றிக் கழகத்தின் சார்பில் கேட்டுக் கொள்கின்றேன்.

இவ்வாறு மல்லை சி.ஏ. சத்யா தமது அறிக்கையில் கூறியுள்ளார்



காஞ்சிபுரம் மாவட்டசெயலாளர். முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன் வழிகாட்டுதலின்படி மதுராந்தகம் சட்டமன்ற வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து மதுராந்தகம் மருத்துவமனை சாலையில் தொ.மு.ச. பேரவை துணைத்தலைவர் இரா. பொன்னுராம் தலைமையில் பேரவை செயலாளர் சு.பத்மநாபன், செங்கல்பட்டு மாவட்ட பேரவை கவுன்சில் செயலாளர் பெப்ஸி கண்ணன், தொ.மு.ச. பொதுச்செயலாளர் க. ரவி, ஒன்றிய துணை செயலாளர் க.செல்வராசு, அமைப்புசாரா தொ.மு.ச. பொருளாளர் சசிக்குமார் தலைவர் சி.கு.ராஜா, ஏ.ஆறுமுகம். போக்குவரத்து தொ.மு.ச. நிர்வாகிகள் முரளி, தணசேகரன் ராசேந்திரன், ராசா, கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலைகள் தொ.மு.ச.வி.ராசேந்திரன், பொதுச்செயலாளர்கள் காஞ்சிபுரம் வி.சந்திரசேகர், டியுசிஎஸ்.ராஜன்சாமிநாதன் மற்றும் ஏராளமானோர்கலந்து கொண்டு வாக்கு சேகரித்தார்கள்.



மதுராந்தகம் இடைத்தேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளர் ஜ.பரந்தாமன் அவர்களை ஆதரித்து சென்னை வடக்கு மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட குமாரவாடி ஊராட்சியில் மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் அறிவுறுத்தலின்படி ஊராட்சி மன்ற தலைவர் எம்.கண்ணன், துணைத் தலைவர் வி.முருகன் தலைமையில் சிவன் கோயில் தெரு பஜனை கோயில் தெரு வீதிகளில் வீடு வீடாக சென்று வாக்கு சேகரித்தனர். கழக நிர்வாகிகள் உடன் கலந்து கொண்டனர்.

தமிழ்நாட்டை தனியார் மயத்தை நோக்கி நகர்த்துகிறதா த.வெ.க. அரசு?

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, செப்.29-

தமிழ்நாட்டை தனியார் மயத்தை நோக்கி நகர்த்துகிறதா த.வெ.க. அரசு? என்று திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி கேள்வி எழுப்பியுள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:-

போக்குவரத்து, மின்சாரம், விமான நிலையம், பல்கலைக்கழகங்கள் எல்லாவற்றையும் தனியாரிடம் தாரை வார்ப்பதற்கா ஓர் அரசு வேண்டும்?

இது வெறும் பொருளாதாரப் பிரச்சினை மட்டுமல்ல - இட ஒதுக்கீடுப் பிரச்சினையும் இருக்கிறது என்பதை மறக்கவேண்டாம்!

தமிழ்நாட்டில் புதிய த.வெ.க. அரசு பொறுப்பேற்றதில் இருந்து, பல துறைகளையும் தனியார் மயமாக்குவதில் மும்முரம் காட்டி வருவது ஏற்கத்தக்கதல்ல!

போக்குவரத்து ஊழியர்களை நீரப்ப வடநாட்டு நிறுவனத்துக்கு அனுமதி!

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத் துறையில் ஓட்டுநர், நடத்துநர் பணிகளுக்குத் தற்காலிகமாக ஆள் தேர்வு செய்து தரும் ஒப்பந்தம் உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்த அவந்திகா என்ற ஒரு நிறுவனத்துக்கு அளிக்கப்பட்டு, வட மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் மறைமுகமாகப் பணியில் ஈடுபடுத்தப்படும் ஆபத்து ஏற்படுத்தப்பட்டிருப்பது - ஏற்கெனவே கண்டனத்திற்குள்ளாகியுள்ளது. தனியார் மயம், அத்துடன் வடநாட்டவர் திணிப்பு என்னும் இரட்டை ஆபத்து!

மின்சாரத் துறையில் தனியார் மயமாக்கலா?

இப்போது, தூத்துக்குடி, எண்ணூர் அனல் மின் நிலையங்களில் பொது மற்றும் தனியார் பங்களிப்புடன் கூடிய புதிய திட்டங்கள் கொண்டு வரப்படும் என்ற அறிவிப்பு - மின்சாரத் துறையைத் தனியார் மயத்தை நோக்கி நகர்த்துவதற்கான மறைமுகத் திட்டமாகும்.

அத்துடன், தமிழ்நாட்டில் வருகிற 6 மாதத்துக்குள் மின் கட்டணக் கணக்கீட்டு பணிகளில் ஒப்பந்த தொழிலாளர்களை நியமிப்பத ற்காக தனியாருக்கு டெண்டர் வெளியிடப் போவதாகவும், இந்தப் பணிகள் அக்டோபர் மாதம் தொடங்கி நடைபெற இருப்பதாகவும் தகவல்கள் வெளியாகி உள்ளன. மின்வாரியத்தில் பணியாளர்கள் பற்றாக்குறையால் ஒப்பந்த ஊழியர்கள் நியமிக்க ப்பட்டுள்ளனர் என்று மின்சா ரத் துறை தெரிவித்துள்ளது. போதிய பயிற்சி இல்லாத பணியாளர்களால் ஏற்படும் தவறுகளுக்கு கூடுதல் மின் கட்டணம் விதிக்கப்பட்டு, பொதுமக்கள் பாதிக்கப்படும் நிலை இருப்பதை மின் துறையினர் சுட்டிக் காட்டுகின்றனர்.

தமிழ்நாட்டில் இந்த ஆட்சி வந்தது முதலே அறிவிக்கப்படாத மின்வெட்டு தொடர்ந்து அமலாகிவருகிறது. அமைச்சரும், உயர்நீதி மன்ற நீதிபதியும் கலந்து கொண்ட நிகழ்ச்சியிலேயே மின்வெட்டு ஏற்பட்டிருப்பது நடப்பு நிலையை எடுத்துக் காட்டுவதாகும். இதில் பயிற்சி பெறாதவர்களையும், ன தற்காலிகப் பணியாளர்களையும், தனியார்களையும் கொண்டு வருவது என்பது மேலும் இப் பிரச்சினையைச் சிக்கலுக்கு உள்ளாக்குவது ஆகும்.

விமான நிலையத்தைத் தனியார் மயமாக்க வேண்டுமா?

அதே போல, சென்னை விமான நிலையத்தைத் தனியார் மயமாக்க வேண்டும் என்று முதலமைச்சர் ச. ஜோசப் விஜய் அவர்கள் பிரதமருக்கு ஒரு மாதத்திற்கு முன்பு எழுதிய கடிதம் வெளி வந்துள்ளது. விமான நிலையம் சரியாகச் செயல்பட வில்லை, அது மேம்படுத்தப்பட வேண்டும் என்று முதலமைச்சர் விரும்புவாரே யானால், அதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்வதற்குக் கோரிக்கை விடுக்க வேண்டுமே தவிர, அதைச் சிறப்பாகச் செயல்படுத்துவதற்கு வற்புறுத்த வேண்டுமே தவிர, விமான நிலை யத்தையே தனியாருக்குத் தாரை வார்க்கப் பரிந்துரைப்பதா? தனியார் மயத்தைத் தடுக்க வேண்டும் என ஒன்றிய அரசுக்குக் கூற வேண்டிய முதலமைச்சரே தனியார் மயமாக்க வேண்டுகோள் விடுப்பதா?



தமிழ்நாடு அரசுக்கே உரிமையாகும் வகையில் அமைக்கப்படவிருந்த பரந்தூர் விமான நிலையத் திட்டத்தைக் கைவிட்டதோடு மட்டுமல்லாமல், ஏற்கெனவே இருக்கும் மீனம்பாக்கம் விமான நிலையத்தையும் தனியார் மயமாக்குமாறு வேண்டுகோளும் விடுத்திருப்பது எந்த நோக்கத்தில்? யாருக்குப் பயன் அளிப்பதற்காக என்ற சந்தேகத்திற்கு என்ன பதில்? விமான நிலையங்களைக் குத்தகைக்கு எடுக்கும் அதானி, அம்பானி போன்ற பெரு நிறுவனங்களுக்குத் தானே இந்தப் பரிந்துரை பயன்படும்?

தனியார் பல்கலைக்கழகங்கள் மூலம் இடஒதுக்கீடு பறிப்பு!

இன்னொரு புறம், அண்மையில் தமிழ்நாடு அரசு தனியார் பல்கலைக்கழகங்களை அமைப்பதற்கான விதிகளைத் திருத்தி, ஒரு சட்டத்தை நிறைவேற்றியுள்ளது. தனியார் பல்கலைக்கழகங்களை அமைப்பதற்குக் குறைந்தது 100 ஏக்கர் நிலம் தேவை என்ற விதியை மாற்றி, சென்னை பெருநகரம் என்றால் 12 ஏக்கர் நிலம் போதுமானது என்றும், பிற மாநகராட்சிகள், நகராட்சிகள் என்றால் 18 ஏக்கரும், பிற இடங்களுக்கு 24 ஏக்கரும் போதுமானது என்று மாற்றியுள்ளது. இதன் மூலம் ஏராளமான தனியார் கல்லூரிகள் தனியார் பல்கலைக்கழகங்களாக உருவாகும்.

அரசுப் பல்கலைக்கழகங்களின் இணைப்புக் கல்லூரியாக இருக்கும் கலை அறிவியல் கல்லூரிகளிலும், அண்ணா பல்கலைக்கழகத்தின் இணைப்புக் கல்லூரிகளாக இருக்கும் தனியார் பொறியியல் கல்லூரிகளிலும் தமிழ்நாடு அரசுச் சட்டப்படியான 69% இடஒதுக்கீடு வழங்கப்பட்டு வருகிறது. தனியார் பல்கலைக்கழகங்களை உருவாக்கத் திருத்தப்பட்டுள்ள இந்த விதிமுறைகள் மூலம், அரசுப் பல்கலைக் கழகங்களிலிருந்து விடுபடும் தனியார் நிறுவனங்கள் இந்த இடஒதுக்கீட்டைப் பின்பற்ற மாட்டார்கள். இதனால், பாதிக்கப்படப் போவது யார்? ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, சிறுபான்மை இஸ்லாமியச் சமூகங்களைச் சார்ந்த ஏழை, எளிய மக்கள் தான்! அரசியலமைப்புச் சட்டத்தின் பாதுகாப்புடன் உள்ள 69% இட ஒதுக்கீட்டை, இப்படி தனியார் மயத்தின் மூலம் காலி செய்வதா?

சமூகநீதியை மறைமுகமாக மறுக்கும் நடவடிக்கையே!

தனியார் மயம் என்பது பொருளாதாரப் பிரச்சினை மட்டுமல்ல; சமூகநீதிப் பிரச்சினையும் ஆகும். தற்காலிகப் பணியாளர்களை நிரப்புவது சமூகநீதியை மறைமுகமாக மறுக்கும் நடவடிக்கை ஆகும். தனியார் மயமாகும் நிறுவனங்களில் இடஒதுக்கீடு அறவே இல்லை என்பதையும் சேர்த்துத் தான் இப் பிரச்சினையை அணுக வேண்டும்.

முன்பு இப்படித்தான், ஒன்றிய அரசுப் பணியிடங்களில் பிற்படுத்தப்பட்டோருக்கு இடஒதுக்கீடு வழங்கும் மண்டல் ஆணையப் பரிந்துரை செயல்படுத்தப்பட்ட பின், வரிசையாக அரசு நிறுவனங்கள் தனியார் மயமாக்கப்பட்டு, இடஒதுக்கீட்டின் பலன் முழுமையாகக் கிடைக்காமல் தடுக்கப்பட்டது. அதே போன்ற செயலைத் தமிழ்நாட்டிலும் செய்யலாம் என்று யார் நினைத்தாலும், அது அவர்களுக்குக் கடுமையான எதிர் விளைவைத் தோற்றுவிக்கும் என்பது அனுபவப் பூர்வமாகத் தமிழ்நாடு கண்டுள்ள வரலாறு! மீண்டும் அதைச் சோதித்துப் பார்க்க த.வெ.க. அரசு முயற்சிக்க வேண்டாம் என்று எச்சரிப்பது நம் கடமை.

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மயிலை மேற்குப் பகுதி

121 (அ) வட்டச் செயலாளர் சீ.கிருஷ்ணமூர்த்தி மறைவு!

கழகத்தினர் அஞ்சலி! இன்று இறுதி ஊர்வலம்!

சென்னை, செப்.29-

சென்னை, தென்மேற்கு மாவட்டம் மயிலை மேற்குப் பகுதி 121(அ) வட்டக் கழகச் செயலாளர் சீ. கிருஷ்ணமூர்த்தி (வயது 52) அவர்கள் உடல்நலக்குறைவால் நேற்று (28.9.2026 - திங்கட் கிழமை) பிற்பகல் 1.15 மணியளவில் இயற்கையெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.



செய்தியறிந்ததும் கழக முன்னணியினர், கழகத் தோழர்கள் திரளாகச் சென்று மறைந்த சீ.கிருஷ்ணமூர்த்தி அவர்களின் உடல் மீது மலர் மாலை வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரின் இறுதி ஊர்வலம் இன்று(29.9.2026) அவரது இல்லத்தில் இருந்து புறப்பட்டு, மயிலாப்பூர் மயானத்தில் தகனம் செய்யப்படுகிறது.

மறைந்த சீ.கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்கு எஸ். அம்பிகா என்ற தாயாரும், கே.இந்துமதி என்ற மனைவியும், கே.சாய் திலக், கே.சாய் நித்தின் என்ற இரு மகன்களும் உள்ளனர்.



மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் கழக வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர், முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆலோசனைபடி, கினார் ஊராட்சி, கே.கே.புதூர், 243 பாகப் பொறுப்பாளர்கள் செம்பாக்கம் வடக்கு பகுதிச் செயலாளர் பல்லாவரம் ஏ.கே.கருணாகரன், தாம்பரம் கிழக்கு பகுதிச் செயலாளர் மாடம்பாக்கம் ஆ.நடராஜன் ஆகியோர் தலைமையில் புஷ்பராஜ், வைலட் ராணி, அஜித், சி.ஆர்.நரேஷ்குமார், கே.பிரபு, ஆர்.ராதாகிருஷ்ணன், எம்.ஐ.டி.இ.சுரேஷ், பொண்.சதாசிவம், சாம்சன், கார்த்திகேயன் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் வாக்கு சேகரித்தனர்.



மதுராந்தகம் சட்டமன்ற தொகுதி வெற்றி வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து சென்னை வடக்கு மாவட்ட இலக்கிய அணி சார்பில் மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் ஒலி ஒளி ஆ.பாபு தலைமையில் பள்ளியகரம் பழைய காலனி கருணகரச்சேரி ஊராட்சியில் உதயசூரியனுக்கு வாக்களர்களிடம் வாக்கு கேட்டு பிரச்சாரம் செய்தனர்.ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி செயலாளர் இரா.லட்சுமணன் துவக்கி வைத்தார். உடன் இலக்கிய அணி பகுதி அமைப்பாளர் அழகானந்தம், ஆ.மணி, இரா.சீமான், டேனியல், டி.மனோகரன், எஸ். கிருஷ்ணசாமி, பாபு, முகமது பரூக், மாரிமுத்து, வீரராகவன், ஹரி, சிவசங்கர், மூர்த்தி, கோகுல், உள்ளிட்ட அனைத்து கழக நிர்வாகிகளும் வாக்கு சேகரித்தனர்.